# THE MORNING STAR.

**Vol. 62.** **Jaffna, Thursday 23rd of Oct. 1902.** **No 22**

Righteousness Exalteth a Nation but Sin is a Reproach to any People.

THE CEYLON STEAMSHIP COMPANY LIMITED.



Lady Havelock and Lady Gordon are appointed to sail from Mandativoe for Colombo on the undermentioned dates:—

Via Paumben.

| | | |
|---|---|---|
| Lady Havelock | 12th Nov | 1902. |
| " " | 26th " | " |

Via Point Pedro.

| | | |
|---|---|---|
| Lady Gordon | 3rd Nov. | " |
| " " | 17th " | " |
| | 1st Dec· | |

W. MATHER & SON, Agents

WHERE To See
and WHERE To Buy
The Best Articles?
You will see the HIGH GRADE GOODS
at ALEXANDER BROS. & CO.
"FLEET"
A first class Sample Bycycle
first of the kind to Jaffna, just received
Price Rs. 300 Cash.

Alexander Brothers & Co.

Importers of British & Foreign Goods.

**THE JUNCTION.**
JAFFNA.

THE JAFFNA COMMERCIAL CORPORATION LIMITED.

Remittances can be made
Between.
Jaffna, Batticaloa, and Colombo
Both by wire and Draft
To and From

**Colombo and Jaffna.**

| | |
|---|---|
| Commission on wire transfer above Rs 500.00 | 1° |
| on wire transfer under " 500.00 | 2° |
| on draft on sums above " 500.00 | ½° |
| on draft on sums under " 500 00 | 1° |

**From Jaffna to Batticaloa.**

| | |
|---|---|
| Commission on wire transfer | ½° |
| Commission on Draft | 1° |

**From Batticaloa to Jaffna.**

| | |
|---|---|
| Commission on wire transfer | 1° |
| Commission on Draft | ½° |

To and from
**Colombo & Batticaloa**

| | |
|---|---|
| Commission on wire transfer | 1½° |

Commission on Draft and cashing Colombo cheques ¾°/₀ on sums above Rs. 250 00
1o/o on sums under Rs. 250.00

**From Jaffna to Madras Calcutta & Rangoon**

Commission on Draft { Madras & Calcutta ¾°
{ Rangoon 1 o/o

| | |
|---|---|
| Colombo Bankers. | The National Bank of India Ltd. |
| Madras | The National Bank of India Ltd. |
| Calcutta | The National Bank of India Ltd. |
| Rangoon | The National Bank of India Ltd. |
| Batticaloa | The Jaffna Commercial Corporation Ltd |
| Jaffna | The Jaffna Commercial Corporation Ltd |

WILLIAM MATHER.
Managing Director.

## USEFUL BOOKS.

MODERN LETTER WRITER. (SIXTH EDITION) Containing 635 letters. Useful to every man in every rank and position of life for daily use. Re. 1, post 1 anna.

HELPS TO THE STUDY OF ENGLISH (THIRD EDITION.) Containing an exhaustive collection of Phrases. Idioms, Proverbs, with their explaminations and proper uses Rs. 3, postage 3 annas.

Every-Day Doubts and Difficulties (in reading, speaking and writing the English Language.) Third Edition Re. 1, post 1 anna.

A HAND-BOOK OF ENGLISH SYNONYMS.—Explained with illustrative sentences. Aids to the right use of *synonymous* words in composition. Re. 1, postage 1 anna.

A COMPANION TO ENGLISH GRAMMAR AND COMPOSITION:- Very useful to the Entrance candidates 8 annas, postage 1 anna.

Beauties of Hinduism. With notes, Ans, 8, post 1 anna.

Select Speeches of the Great Crators:—Vols. I & II. These books help to write idiomatic English, improve the oratorical and argumentative powers. &c. Each Volume Rs. 2, postage 1½ ancas.

Solutions of 642 very important Examples in ARITHMETIC, ALGEBRA AED GEOMETRY. For Entrance and Preparatory Classes. Rs. 1 8, postage 1 anna.

Solutions of over 300 typical Examples in TRIGONOMETRY. For F. A. students. Re. 1, postage 1 anna.

By V.P. Post 2 annas extra. TO BE HAD OF (MESSRS BOSE, BANERJI & Co., 40. SUKEA'S STREET, (HARRISON ROAD CALCUTTA.

### ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary } No. 1297.
Jurisdiction }

In the Matter of the Estate of the late Velauthar Murugesu of Thambagamam. Deceased.

Superamaniar Thambiah of Thambagamam Petitioner.

1. Chinnapillai wife of Superamaniar Thambiah of Thambagamam
2. Murugesar Th[illegible]karasar of do
3. Kanapathiar Kathirkamer and wife
4. Vallipillai of do Respondents.

This matter of the Petition of Superamaniar Thambiah of Thambagamam praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Velauthar Murugesu of Thambagamam coming on for disposal before W. R. B. Sanders Esquire District Judge, on the 7th day of October 1902 in the presence of Mr. Tambyah, S. Cooke Proctor on the part of the Petitioner and affidavit of the Petitioner dated the 3rd day of October 1902 having been read, it is declared that the Petitioner is the son-in-law of the said intestate and is entitled to have Letters of Administration to the estatate of the said Intestate issued to him unless the respondent or any other person shall on, or, before the 24th day of November, 1902 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 7th } W. R. B. SANDERS.
day of Oct, 1902. { District Judge.

### ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary | No. 1299
Jurisdiction |

In the Matter of the Estate of the late Marypillai wife of D. Patrick Muttutampi of Karaiur Deceased.

David Patrick Muttutampi of Kariur. Petitioner.

James Muttiah Solomon of Karaiur. Respondent

This matter of the Petition of David Patrick Muttutampi of Karaiur praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Marypillai wife of D. Patrick Muttutampi coming on for disposal before W. R. B Sanders Esquire, District Judge on the 16th day of October 1902 in the presence of Mr. Tambiah S. Cooke Proctor on the part of the Petitioner and affidavit of the Petitioner dated the 16th day of October 1902 having been read, it is declared that the Petitioner is the husband of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondent or any other person shall on or, before the 28th day of November 1902 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 16th } W. R. B. SANDERS
day of October 1902 { District Judge

### ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary | No. 1300
Jurisdiction |

In the Matter of the Estate of the late Valuppillai wife of Mootar Arampar of Puloly west Deceased.

Mootar Arampar of Puloly west Petitioner

1. Valliar Kanapathippillai and wife
2. Nachipillai of Puloly west
3. Ponnar Sanmugam and wife
4. Chivakamipillai of do Respondents.

This matter of the Petition of Mootar Arampar of Puloly west praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Vallipillai wife of Mootar Arempar coming on for disposal before W. R. B. Sanders Esquire, District Judge on the 16th day of Oct. 1902 in the presence of Mr. Tambiah. S. Cooke Proctor on the part of the Petitioner and affidavit of the Petitioner dated the 16th day of October 1902 having been read, it is declared that the Petitioner is the husband of the said intestate and are entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondents or any other person shall on or, before the 28th day of November 1902 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 16th W. R. B. Sanders
day of Oct. 1902 District Julge

## Local and General.

**Weather.** There is no reason to doubt the advent of the North monsoon. Commencing with the 4th we have had rain every day at Batticotta for seventeen days though only a little over 10 inches has been registered. The wind has been very light, but from the North. The farmers have been busy and so far the outlook for a good crop is very promising. We shall probably get more rain in a few days.

**Obituary.** Mr. MacDonnell, Provincial Engineer, died at his residence in Jaffna on Friday the 10th inst. after a very brief illness. A few days before, he took a chill and fever set in followed by other complications which took him off very suddenly. He was a faithful and efficient officer and the Government has lost a valued public servant. We extend our sympathies to the mother and other relatives and friends.

**Bible Society.** The annual public meeting of the Jaffna Auxiliary Bible Society was held in St. Peter's Church, Jaffna, on Monday the 13th inst. A large audience was present and excellent speeches were made by Revs. W. J. Hanan, J. H. Bicknell, Wm. Joseph, E. Solomon, C. J. Williams and A Lockwood The report of the Secretary showed that there had been an increase in the distribution of the Scriptures during the year. The Treasurer reported a slight falling off in the subscriptions from the churches. The balance in hand was needed for the immediate purchase of Bibles and portions, the stock in hand at the Depot being very low. Sir Wm. Twynam K. C. M. G. presided and in his usual impressive manner spoke of the work of the Auxiliary the past year, and of the importance of giving it our loyal support. The same officers were elected for the ensuing year.

**Kangesanturai.** This port has been closed owing to the north monsoon, and the island steamers have commenced to call at Mandative off Jaffna. One of the steamers goes for docking purposes in about a month.

**Coach.** The coach service between Pallai and Matale needs to be looked into by Government if the reports of passengers are to be believed. The railway is not yet completed, and trains will not be running through for two years at least, so the coach service ought not to be allowed to run down.

**Annual Convocation.** The annual gathering of the Christians of the American mission churches was held in the Batticotta church on Friday last. In spite of the inclement weather the people turned out well about 600 being present.

Rev. G. G. Brown presided and after the usual introductory exercises during which the rain came down in torrents, called upon Mr. P L. Christian to give a resume, of the work of the American Board for the past year, and Mr G. Danforth to report anything of interest of the work of the N. E. S. in the islands.

Rev. C. M. Sanders spoke of what the American church expected of us in Jaffna; Mr. Ramalingam Hitchcock spoke of the spiritual growth of the Am. Mis. churches and Mr. G. S. Eddy taking the place of Mr. Albert Curtis who was unavoidably absent, spoke very earnestly of the next forward step.

After a brief intermission Revds T. P. Hunt and B H. Rice conducted the communion service. Owing to the illness and death of the child of Dr. and Mrs. Scott, a number of the missionaries were absent as well as several of the Tamil Christians

It was to be regretted that the bad state of the church roof resulted in several getting wet who were in attendance, but there seemed no other place convenient in which to hold the meeting. Before another rainy season it is hoped that the roof will be put in thorough repair. And the completion of the fine church at Navaly will give us another place in which to hold these large gatherings.

**The Comet.** The comet may be seen any clear night after sunset in the north west, As observed at Batticotta through the telescope, Monday evening, it appears like a nebulous mass with a flattened head and a very short fan-like tail To the naked eye it appears only as a very small hazy star. According to all accounts it will be a much more striking object ten days hence.

**Baby Organ.** for sale at Pt. Pedro cheap. Inquire of Rev. A. Lockwood.

**Marriages.** Mr. Charles. R. Champion son of Rev. Champion of Chundicully was married to Miss H. Tangammah. Mills a daughter of Dr. C. T. Mills of Mannippay, on Wednesday the 22nd inst. in the C. M. S. church at Kockuville. The parties from the church repaired to the bridegroom's residence at Chundicully to receive friends.

On the 27th inst. Monday, Mr. G. N. H. Tampoo Proctor will marry Miss. Ratnam Paul. The ceremonies will take place in the Wesleyan Church, Pettah, and the wedding will be a quiet one owing to the late bereavement in the family of the bride. *Com.*

**P. W. D.** Mr. W. C. Price has been appointed to succeed the late Mr J. MacDonell as Provincial Engineer. He has already assumed duties Mr. N. M. Walker employed at Giant Tank, Mannar is at Jaffna en route to Irranamadu to act for Mr. W. Browne as Irrigation Engineer in charge of the tanks in the Karachi District. *Com*

(Continued on page 4.)

# உ த ய தா ர கை.

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும், பாவமோ எந்தச் சனங்களுக்கும் இகழ்ச்சி.

௯௨ம் புத்தகம்.] யாழ்ப்பாணம், க௯௦௨ம் ௵ ஐப்பசி ௴ ௨௩ ௨ வியாழக்கிழமை. [சங்கியை ௨௨



## இலங்கைப் புகைக்கப்பற் கொம்பனியாரின்

புகைக்கப்பல்கள் பின்வரும் தேதிகளில் கொழும்புக்குப் போகவிருக்கின்றன.

| | |
|---|---|
| கோடன் மண்டைதீவிலிருந்து பருத்தித்துறைவழியாக | 1902. கார்த். ௴ 3௨ |
| | " " 17 |
| | " மார்க 1 |
| அவலக் மண்டைதீவிலிருந்து பாம்பன்வழியாக | " கார்த்தி 12 |
| | " " 26 |

W M Mather & Son. Agents

### விளம்பரம்.

கோப்பாய்ப் போதனாசாலையில் 5 ம் தரத்திலும் 4 ம் தரத்திலும் சேரவிரும்புவோருக்குவைக்கப்படும் பரீச்சை வருகிற மார்கழி ௴ 10 ம் திகதி புதன்கிழமை காலே 9 மணியளவிலே இவ்விடத்திலே நடத்தப்படும்.

இப்படிக்கு W. M. J. Hanan.
முகாமைக்காரன்.

கோப்பாய் 1902 ம் ஆண்டு கார்த்திகை ௴ திகதி.


## உ த ய தா ர கை.

க௯௦௨ ம் ௵ ஐப்பசி ௴ ௨௩ ௨.

### வருடாந்தக் கூட்டம்.
### Annual Convocation.

அமரிக்க பிறதேச மிஷன் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் சென்ற கிழமை ஐக்கிய தேசத்திலே நடைபெற, அச்சங்கத் தாபரிப்பிலிருக்கும் யாழ்ப்பாணக் கிறீஸ்த சபைகளின் வருடாந்தக் கூட்டமும் சென்ற 17 ந் திகதி வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டைத் தேவாலயத்தில் நடைபெறலாயிற்று; அமரிக்கமிஷன் சபைகளிலிருந்து ஆண்கள் பெண்கள் பிள்ளைகளாகிய மூப்பாலாரும், கல்லூரி, போதனாசாலை, உடுவில், உடுப்பிட்டிப் பெண்பாடசாலைகளிலிருந்து மாணாக்கர் மாணாக்கிகளும் திரளாய் வந்து கூடியிருக்க, கனம். பிறவுன் ஐயர் சபாநாயகராயுட்கார்ந்து கூட்டத்தைநடத்தினர். கீதம், வேதவாசிப்பு, பிரார்த்தனையென்னும் ஆரம்பகிரியைகளின்பின், குறிக்கப்பட்டவிஷயங்களிற் கீழ் வரும் முறையாய் அதி எழுப்புதலான பிரசாரணங்கள் செய்யப்பட்டன.

முதலாவதாய், "அமரிக்கன்போட்சங்கத்தின் சென்ற வருட கிருத்தியம்" என்னும் விஷயத்தை, உடுப்பிட்டிச்சபைப் பிரசங்கியாராகிய மெஸ். கிறிஸ்தியன் விஸ்தரித்து, மேற்குறித்த சங்கத்தின் கீழ் நடைபெறும் இருபதுக்கு மேற்பட்ட மிஷன்களிலும் சென்ற வருடத்திலே நல்ல வேலை நடைபெற்றதென்றும், சீனாவிலே விசேஷித்த வேலை நடைபெறற்கிடமுண்டாயிருக்கிற தென்றும், பிலிப்பைபயின் தீவுகளிலே புதிதாயோர்மிஷன் ஸ்தாபிக்க ஆலோசனை நடக்கின்றதென்றும், இவ்வேலைகளுக்காக நாம் செய்யக் கூடிய பெரிய உதவி செபமே யென்றுங் கூறிமுடித்தனர்.

இரண்டாவதாய், "சுதேச சுவிசேஷசங்கவேலை" என்னும் விஷயத்தில் இவ்வேலையி லேற்பட்டு புங்குடுதீவிலிருக்கும் மெஸ். டான்வோத் உபதேசிகர் பேசத்துவங்கி, தீவுப்பகுதிகளிலிருக்கும் ஊழியகாரரிலும் அவர்கள் நடத்தும் வேலையிலும் விசேஷமாறுதல்கள் நடைபெறல்வேண்டுமென்றும், யாழ்ப்பாணச் சபைகளில் விசேஷமாறுதல்களுண்டாவதினாலேயே தீவுப்பகுதிகளிலும் மாறுதல்கள் நடைபெறுமென்றுங் காட்டினர்.

மூன்றாவதாய், "சுவிசேஷ ஊழியத்தை நடத்தும் வகையில் யாழ்ப்பாணச் சபைகள் அமரிக்க மிஷன் சங்கத்தவர்களின் அபிப்பிராயத்தைநடப்பிக்கின்றனவா" என்னும் விஷயத்தில் காரைதீவுச் சபைத்தலைவரான கனம். சி. எம். சான்டேஷ்போதகர்பேசத்தொடங்கி, சுவிசேஷ வேலை எல்லாவகுப்பாருக்குள்ளும் எல்லாவகையாயுஞ் செய்யப்படல்வேண்டுமென்றும் போதகர் உபதேசிமார்மாத்திரமல்ல கிறிஸ்தவர்களானஎல்லோரும் தத்தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நிலையில் சுவிசேஷ வேலை நடத்தல்வேண்டுமென்றும், இவ்வளவுவிரிவாய் வேலை நடைபெற்று அனுகூலங்காணப்படுவதற்குச் சபையார் போதகர்மாராகியஎல்லாக் கிறீஸ்தவர்களுக்குள்ளும் ஒற்றுமையிருக்கவேண்டிய தவசியமென்றும் விரித்துரைத்தனர்.

நான்காவதாய், "ஆவிக்குரியவளர்ச்சியில் யாழ்ப்பாணத்துச் சபைகளிலே அமரிக்க மிஷன் சங்கத்தார் காத்திருக்குமளவான அனுகூலங்காணப்பட்டிருக்கிறதா" என்னும் விஷயத்தில் உசன்சபைப்பிரசங்கியார் மெஸ். இற்சுக்கோக் இராமலிங்கம் பிரசாரணஞ் செய்து, கிறீஸ்தவர்கள் அஞ்ஞானக் கொள்கைகளேயும் அவபத்திகளையுந் தள்ளிவிட்டுக் கிறீஸ்துவுக்குத் தம்மை முற்றுமொப்புக் கொடுக்கும்போதே ஆவிக்குரிய வளர்ச்சிகாணப்படுமெனவுறுத்தினர்.

ஐந்தாவதாய், "முன்னேறிச் செல்லல்" என்னும் விஷயத்தில் மெஸ். எதி ஐயர் போதனை கூற எழுந்து, சுயதாபரிப்பு, சுயஆளுகை, சுயஊழியவிருத்தி என்னும் விஷயங்களில் விசேஷமுயற்சி செய்திருக்கும் யாழ்ப்பாணச்சபையார் இன்னும் முன்னேறிச் செல்ல இடமிருக்கின்றதென்றும், கிறீஸ்தவரானோர் எல்லோரும் ஒருவர்க்கொருவர் அன்பு காட்டி, தம்மையும் தம்பிள்ளைகள் ஆஸ்திகளையும் தேவ ஊழியத்துக் கென்று ஒப்புக்கொடுத்து, சுவிசேஷசங்கம், தொண்டிமிஷன், கிராமப்பிரசங்க வேலை யிவற்றையின்னும் அதிக உற்சாகத்தோடு நடத்தல் வேண்டு மென்றும், அதற்காகச் செபமூலமாய்த் தேவனோடு இடைவிடாது ஐக்கியப்படல் வேண்டு மென்றுங் கூறினர்.

முதற் கூட்டம் முடிந்து கால்மணி நேரத்தின் பின் கனம். றைஸ், கனம். அன்ருபோதகர்களால் திருவிருந்தாராதனை நடத்தப்படசாயர்தரம் மூன்று மணியளவிற் கூட்டஞ் சமாப்தியாயிற்று.

### வால்வெள்ளி.
### A Comet.

இந்நாட்களிலே சூரிய அஸ்தமனத்தின் பின் வானத்தின் மேற்குத்திசையிலே யோர் வால்வெள்ளி தோற்றுகின்றது தூரதிஷ்டிக்கருவியில் இதன் தலை, வால் என்பன தெளிவாய்க் காணப்படுகின்றனவாயினும் வெற்றுக்கண்ணுக்கு மங்கலான மிகச் சிறியவோர் நட்சத்திரம்போலமாத்திரம் இந்தக் கிழமை தோற்றுகின்றது. அது சூரியனை நோக்கிச்செல்கின்றமையால் பிரபையில் வரவர அதிகரிக்க அதன் வாலும் ஒருவேளை வெற்றுக்கண்ணுக்குத் தோற்றக்கூடியதாகும். இவ்வால்வெள்ளி முதன்முதற் சென்ற புரட்டாசிமாதம் 1 ம் திகதி கலிபோணியாவிலுள்ள கமில்றன்மலையிலிருக்கும் லிக் சோதிடோப்பரிகையிற்கண்டுபிடிக்கப்பட்டது.

வானசாஸ்திரிகளின் கணிப்புப்படி இந்தமாதம் 5 ந் திகதியே இத்தூமகேது பூமிக்கு அதி சமீபமாகி 3 கோடியே 50 லட்சம் மைமல் தூரத்தில் நின்றது. இப்போது பூமியிலிருந்து அதன்தூரம் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டுபோகின்றது. சூரியனைவலஞ்செய்துகொண்டு மறுபடியுந்திரும்பிவரும். 23ந் திகதியாகியஇன்று அதன்தூரம்ஏறக்குறைய 7 கோடிமைல். 27ந்திகதி 8கோடியாயிருக்கும். இத்தூமகேதுவின் விட்ட அளவு 2 லட்சம் மைல். அதாவது பூமியின் விட்ட அளவின் இருபத்தைந்துமடங்கு. இது பூமியிலும்பார்க்க 600மடங்கு பருப்பங்கொண்டது. சென்ற 7 ந் திகதி அதன் வால் நீளம் 10 லட்சம் மைலாயிருந்தது. சூரியனைக் கிட்டிச் சேரும்போது வால் மாறுதலடையும். கார்த்திகைமாதம் 23 ந் திகதி இவ்வால்வெள்ளி சூரியனுக்கு அதிசமீபமாகும். அப்போது அதற்கும் சூரியனுக்குமிடைத்தூரம் 4 அல்லது 5 கோடி மைலாயிருக்கும்.

வால்வெள்ளி சூரியனுக்கு அதி சமீபமாய்ச்செல்லும் நாட்களில், சூரியப்பிரகாசத்துக்குட்பட்டுச் சூரியனுடன்அஸ்தமிக்குமாகையால் அந்நாட்களில் அதைக் காணல்கூடாது. கார்த்திகை 20 ந் திகதிவரைகருந் தெளிவாய்க்காணலாகும். கார்த்திகை 15 ந் திகதி வரையில் அதி பிரபையாயிருக்கும். இப்போது சூரிய அஸ்தமனத்தின்பின் மேற்கிற் காணப்படும் இவ்வால்வெள்ளி, சூரியனைச் சுற்றிமீளும்போது மார்கழிமாதத்தில் மறுபடியும் தோற்றுதல்கூடும். அப்போது சூரியோதயத்தின் முன் கிழக்குத்திசையிற்தோற்றும்.

ஒழுங்காய்க் குறித்த காலவட்டத்திற் சூரியனைச்சுற்றிச்செல்வனவாயறியப்பட்டவால்வெள்ளிகளுள் மூன்று இவ்வருடத்திற்தோற்றவேண்டியன அவற்றுள், 1886 ம் ௵ புறூக்ஸ் என்பவராற் கண்டறியப்பட்டு ஐந்தரை வருடத்தொருமுறை சூரியனைச் சுற்றுவதாகிய வால்வெள்ளி சென்ற தைமாதம் தோற்றிற்று. 1895 ம் ௵ சுவிவ்ற் என்பவராற் கண்டறியப்பட்டதும் எழுவருடத்தொருமுறை சூரியனைச் சுற்றுவதுமாகிய வால்வெள்ளி கார்த்திகை மாதத்திலும், தெம்பெல், சுவிவ்ற் என்னு மிருவராலும் கண்டறியப்பட்டு ஐந்தரை வருடத்தொருமுறை சுற்றுவதாகிய வால்வெள்ளி மார்கழிமாதத்திலும் பூமியிலுள்ளார்க்குத் தோற்றவேண்டியன. ஆனல் இப்போது வானத்திற் தோற்றுவது இவற்றிலொன்றல்லவென்பதும், புதிய வொன்றென்பதும் இதுவரையில் வானசாஸ்திரிகளின் தீர்மானம்.

### யாழ்ப்பாணம்.

காலநிலை—Weather.— சிலபாகங்களிற் கூடவும் சிலபாகங்களிற் குறையவுமாய் யாழ்ப்பாணத்தின் எல்லாப்பாகங்களிலும் மழைபெய்திருக்கின்றது. சிலவிடங்களில் வயலை வெள்ளம் மூடிக்கொண்டமையால் விதைக்க இயலாது கமக்காரர் முட்டுப்படுகின்றனர்.

மார்க்க எழுப்புதற்கூட்டம்—Fort Convention- சென்ற 14 ம், 15 ம், 16 ம் திகதிகளில் யாழப்பாணக் கோட்டைக்குள்ளிருக்கும் பெரிய தேவாலயத்திலே, மெஸ். எதி, மெஸ். அசரய்யா, மெஸ். பரமானந்தம் என்பவர்களால் விசேஷ மார்க்க எழுப்புதற்கூட்டங்கள் வைக்கப்பட்டன. யாழ்ப்பாணத்திலுள்ள மூன்று புரொட்டெஸ்தாந்து மிஷன் சபைகளிலுமிருந்து திரளானோர் வந்து நற்பலனடைந்தனர். இராக்கூட்டங்களுக்கு அதி திரளானோர் வந்தமையாற் கோயில்முழுவதும் நிரப்பப்படப் பலர் வெளியே நிற்கவேண்டியவராயினர். கல்விப்பெருமை, செல்வப்பெருமை, சாதிப்பெருமை யாதிய பாவங்களைக் கண்டித்து, கிறிஸ்தவர்கள் தம்மைக் கிறிஸ்துவின் அடிமைகளாக்கி அவருக்கே முற்றும் ஒப்புக்கொடுத்து அன்பின் ஊழியஞ்செய்ய எவி, மேற்குறித்த மூவருஞ் செய்த பிரசங்கங்கள் அனேகர் ஆவியின் அனலும் உயிர்ப்புமடைதற் கேதுவாயின.

தேகவியோகம்.—Obituary.—மானிப்பாய் வைத்திய ஆஸ்பத்திரித்தலைவரும் மிஷனரியுமாகிய கனம். ஸ்கொற் வைத்தியரின் இரண்டாங்குமாரனாகிய பேர்சிஸ்கொற் என்னும் பிள்ளை சென்ற 17 ந் திகதி சடுதியாயுண்டான வருத்தத்தா லிறந்துபோனது யாழ்ப்பாணமெங்கும் பெருந்துயரத்தையுண்டாக்கிற்று மூத்தகுமாரன் சிலவருடங்களின்முன் இறந்துபோக, பெற்றோரின் ஆறுதலுக்கிடமாகி அதி கரிசனையாய் வளர்க்கப்பட்ட இரண்டாங் குமாரனுமிறந்துபோனது கனம். ஸ்கொற் வைத்தியருக்கும் பாரியாருக்கும் ஆற்றொணாத்துயரத்தைக்கொடுக்கும். என்செய்யலாம. தேவசித்தமிதுவாயிற்று. மூன்றுவயதுள்ள இப்பிள்ளையாண்டான் இளமையிலேயே அதி புத்திக்கூர்மையும் நற்குணமும் பொருந்தியவராய்ச் சகலராலும் நேசிக்கப்பட்டனர். சடுதியாயுண்டுபட்ட காய்ச்சலோடு கூடிய வலியே 24 மணித்தியாலத்துட் பாலனின் மரணகாரணமாயிற்று. பிரேதசேம ஆராதனை சனிக்கிழமை காலை உடுவிற் தேவாலயத்திலும் சேமச்சாலையிலும் கனம். கேஸ்றிங்ஸ், கனம். பிறவுன் என்பவர்களால் நடத்தப்பட்டது. பாலனின் பிரிவிற் துயருறுவாரோடு நாமும் அனுதாபப்படுகின்றோம்.

வடமாகாண இஞ்சினீராயிருந்த மெஸ் மெக்டனல்ட் சென்ற 10 ந் திகதி காலஞ்சென்றனரென்னுந்துக்கசங்கதி யறிவிக்கப்பட்டது. சுவாதநோயே இவரின் மரணகாரணம். பிரேதசேம ஆராதனை சுண்டிக்குளியிலே கனம். தொம்சன் ஐயரால் நடத்தப்பட்டது.

மல்லாகவாசரும், பினங்கைச்சேர்ந்த பிறையென்னுமிடத்தில் ஸ்றேஷன் மாஸ்றராயிருக்கும் மெஸ். அ. துரையப்பாவின் தகப்பனும், உடுவில்வாசரான் மெஸ். சாமுவேல் டுவைற் எனபவரின் சம்பந்தியு மாகிய மெஸ. க. அரியகுட்டியென்பவர் பிள்ளைகளைக் காணப்போனவிடத்தில் தொடுவாய் ராச்சியத்திற் காத்திராப்பிரகாரங் காலஞ்சென்றனரென்னுந் துக்கசங்கதி கேள்வியானோம்.

வித்தியாபகுதி.—Educational Dept.— வடக்கு. கிழக்கு மாகாணங்களின் தலைமை வித்தியாதரிசியாகிய மெஸ். லெம்பிறக்கென், கண்வைத்தியம் செய்விக்கும் நோக்கமாய் மூன்றுமாதலீவில் சென்னைபட்டினஞ்செல்ல ஆயத்தப்பட அவருடைய இடத்துக்கு, கொழும்பு ராசாங்க கல்லூரி ஆசிரியர் [redacted]லாருவரும் அயிட்டிங்காய்த் தென்மாகாணத்தலைமை வித்தியாதரிசியாகக் கடமைபார்த்தவருமாகிய மெஸ். ஹென்றி பேணன்டோ வீ. ஏ. நியமனமாகி யாழ்ப்பாணம் வந்து கடமையையேற்று நடத்துகின்றனர். வைத்தியரின் ஆலோசனைப்படி மெஸ். லெம்பிறக்கென் ஒருவேளை உத்தியோகத்தால்இளைப்பாறல்கூடுமாம். மேல்மாகாண வித்தியாதரிசி மெஸ. வான்கயிலன்பேக்கும், புதிதாய் வந்தவரான மெஸ. ஸ்றிக்லன்டுஞ் சேர்ந்து மேல்மாகாணத்தோடு தென்மாகாணக்கடமைகளையும்பார்ப்பர். மெஸ. ஸ்றிக்லன்ட் மெஸ. உவாக்கரினிடத்துக்கு நடுமாகாண வித்தியாதரிசியாய் வந்திருப்பினும், சிலகாலம் மெஸ வான்கயிலன்பேக்குடன் தங்கிக் காரியங்களை அறிந்தபின்னரே தமதுகடமையை பொறுப்புக்கொள்வர் அதுவரைக்கும், இதுகாறும பார்த்த வகையாய் தென்மாகாண வித்தியாதரிசியாகிய மெஸ. செனவரத்தினியே நடுமாகாணக் கடமைகளைப்பார்ப்பர்

எம் ஏசண்டர் —The Agent.—டிஸ்திறிக் நீதிபதி மெஸ. சான்டேஷ் முன்னிலையிற் செய்யப்பட்ட கள்ளச்சத்தியவழக்கொன்றை விளங்குவதற்காக ஏசண்டர் மெஸ. லூயிஸ, சென்ற 15 ம், 16 ம், 17 ம், திகதிகளில் டிஸ்திறிக் நீதிபதியாயுங் கடமைபார்த்தனர். வரும் மாதத் துவக்கத்தில் மெஸ. ஐவேஷ இவ்விடம் வரும்போது இவர் நடுமாகாண ஏசண்டராய்க் கடமைபார்க்கச்செல்வராம்.

ஆட்கள்.—Personal.—கும்பகோணத்திலுள்ள அரசாட்சிக் கல்லூரியின் ஆசிரியருள் ஒருவரான மெஸ். ஜேம்ஸ. கென்சுமன மறுபடியும் அக்கல்லூரித் தலைவராய்க் கடமைபார்க்கும்படி அரசாட்சியாரால் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். வழமையாய் இவ்வுத்தியோகம் பார்ப்போர் அதி உயர்ந்த சம்பளம்பெறும் இங்கிலிஷகாரரே.

தொடுவாய் ராச்சியத்திலே வைத்தியப் பகுதியில் வேலையாயிருந்தவராகிய டக்தர் எ. கே. சரவணமுத்து, அவ்வேலையை விட்டு யாழ்ப்பாணம் வந்து தம் சுற்றமித்திரர் நடுவில் வசிக்கின்றனர். இவர், அமரிக்க மிஷனின் கீழ மானிப்பாயில் நடைபெற்ற வைத்திய வகுப்பிற் கற்று, தொடுவாய் ராச்சியஞ்சென்று சிங்கப்பூர், பினங், பேராக்கு முதலிய இடங்களில் அரசாட்சி வைத்தியப்பகுதியில் 14 வருடங்களாய் வேலை பார்த்து அனுபவ பரீட்சையடைந்தவர். தமிழ் வைத்தியமும் தெரிந்தவர் ஜெனனத்தாற் காரைதீவையும் விவாக சம்பந்தத்தால் மல்லாகத்தையுஞ் சேர்ந்தவர். யாழ்ப்பாணத்திலிருந்துதஞ்சுயபொறுப்பில்வைத்தியம் நடத்துவதே இவர் நோக்கம்.

மாத்தளையிலே தேயிலைத்தோட்டத்திற் கொண்டக்றராயிருப்பவரும், கோப்பாய் உபதேசியார் மெஸ். முத்துவேலுவின் மகனுமாகிய மெஸ். எஸ். தம்பிராசா சிலகால லீவில் யாழ்ப்பாணம் வந்து தம் சுற்றமித்திரரைச் சந்தித்துக் கொண்டாடுகின்றனர்.

தொடுவாய்ராச்சியத்திலுள்ள வத்துக்காசாவிலே அரசாட்சி வைத்திய சாலையில் வேலையாயிருப்பவரும், நெடுங்காலம் அமரிக்க மிஷனின் கீழ் வேலையாயிருந்தவராகிய யேக்கப் உபதேசியாரின் இரண்டாம் புத்திரருமாகிய டக்தர் இ. பி. யேக்கப் ஆறுமாத லீவில் யாழ்ப்பாணம் வந்திருக்கின்றனர். காரைதீவுவாசரான இவர் விவாகசம்பந்தத்தாற் புங்குடுதீவைச்சேர்ந்தவர்.

காலியில் அரசாட்சி வைத்தியராயிருக்கும் டக்தர் இளையதம்பி அவர்கள் சுகவீனங் காரணமாய் லீவில் யாழ்ப்பாணம் வந்திருக்கின்றனர். உபகாரச் சம்பளத்தோடு இளைப்பாறக் கருதுகின்றனராம்.

யாழ்ப்பாணம் மணியகாரன் மெஸ். தம்பாபிள்ளை முதலியார் சுகவீனங்காரணமாய்க் கீரிமலை சென்று வசிக்க, அவரது மருமகன் மெஸ். இராமலிங்கம் அயிட்டிங்காய் மணியவேலை பார்க்கின்றனர்.

காலஞ்சென்ற மெஸ். மெக்டனல்டின் இடத்தில் வடமாகாண இஞ்சினீராகவதுளையில் டிஸ்திறிக் இஞ்சினீராயிருந்த மெஸ். பிறைஸ் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

தேசாதிபதியின் வருகை.—The Governors Return.—மகுடாபிஷேகத்துக்காய் இங்கிலந்து சென்றிருந்தவராகிய றிட்சுவே தேசாதிபதியவர்கள் வருங்கிழமை ஆரம்பத்திற் கொழும்பு வந்து சேர்வர். இவ்வருடத்துக்குரிய கடைசிச் சபையாய்ச் சென்றகிழமை கூடிய சட்டநிரூபணசபையில் தேசாதிபதிக்கு ஓர் வந்தனோபசாரப்பத்திரம் வாசித்து உபசரணை செய்யும்படி தீர்மானிக்கப்பட்டது. அவரைக் கண்ணியமாய் எற்றுபசரித்தற்காய்க் கொழும்பிலே வேறும் பல ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. தேசாதிபதி வர்தபின் மெஸ். இம்தேண் கொலோனியல் சக்கிடுதெதாராக, மெஸ். ஐவேஷ பழயபடி வடமாகாண ஏசண்டராவர். அவர் சி. எம். ஜி. பட்டம் பெற்று வருவதால் யாழ்ப்பாணத்திலே யவரைக் கண்ணியத்தோடேற்பதற்கான சில ஆயத்தங்கள் நடைபெறுகின்றன.

விவாகம்—Matrimonial.—சுண்டிக்குளிப் போதகர் கனம். சாம்பியன் அவர்களின் இளையபுத்திரராகிய மெஸ். சாள்ஸ். சாம்பியன், மானிப்பாய் வாசரான டக்தர் மில்ஸ். அவர்களின் புத்திரியாகிய மிஸ். அரியெற் தங்கம்மாவை சென்ற 22 ந் திகதி புதன்கிழமை பாணிக்கிரகணஞ் செய்தனர். விவாக ஆராதனை சொக்குவில் தேவாலயத்தில் கனம். டானியேல் போதகரால் நடத்தப்பட்டது. மணமகார் நீடுழிவாழ்க.

தொடுவாய்ராச்சியப் புதினம்.—Straits News—சிலங்கூர், பகான், பேராக் முதலியமலாய்த் தேசங்களிலுள்ள அரசாட்சி உத்தியோகஸ்தருக்கென்று வைக்கப்பட்ட உயர்தரக் கிளேறிக்கல் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி யெய்தினோருள் யாழ்ப்பாணத்தவர்களே அதிகமென்றும் முதலாளாய்ச் சித்தி பெற்றவரும் யாழ்ப்பாணியேயென்றும் அறிவது சந்தோஷபுதினம். முதலாளாய்ச் சித்தி யெய்திய மெஸ். ந. இலங்கையர், கோப்பாய வித்தியாசாலைத் தலைமையாசிரியர் மெஸ். தம்பாபிள்ளையின் நெருங்கிய உறவினர்.

சிலமாசங்களின்முன் நடைபெற்ற "யூனியர் கிளேறிக்கல்" பரீட்சையில் முதலாளாய்ச் சித்தி பெற்றவருங் காரைதீவுவாசருமாகிய மெஸ். எஸ். சணபதிப்பிள்ளை தாப்பா டிஸ்திறிக் ஆபீசில் இரண்டாங்கிளாக்காய் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர் யாழ்ப்பாணக் கல்லூரியிற் கற்று கற்குத்தாப் பிரவேசப் பரீட்சைகடந்தவர். யாழ்ப்பாணிகள் சென்றுழியெங்குஞ்சிறப்பெய்தி யுயர்வடைவார்களாக.

அப்புக்காத்துப் பரீட்சை.—Advocates Examination.—கடைசியாய் நடைபெற்ற இப்பரீட்சையில், பிரதமபரீட்சையில் 8 பேரும். மத்தியபரீட்சையில் 5 பேரும், கடைசிப்பரீட்சையில் 4 பேருஞ், சித்தியாயினர். கடைசிப்பரீட்சையில் சித்தியெய்திய நால்வருள் திண்ணைவேலிவாசரான மெஸ். எஸ். கனகசபை ஒருவர். இவர் யாழ்ப்பாணக்கல்லூரிப் பழையமாணவர்.

கொழும்பிலே பிரபலம் பெற்ற பிறக்தராயிருந்த மெஸ். ஜெயவாடினு என்பவரின் புத்திரர் ஐவர் அப்புக்காத்துமாராய் வருவது யாருங் கவனிக்கக் கூடிய காரியம். மூவர் முந்தியே பிரசித்திபெற்ற அப்புக்காத்துமாராயிருக்கின்றனர். எஞ்சிய இருவரில் ஒருவர் இம்முறை நடைபெற்ற கடைசிப் பரீட்சையில முதலாளாயும் மற்றவர் மத்தியபரீட்சையில் முதலாளாயுஞ் சித்தி யெய்தியிருக்கின்றனர்

தேசாதிபதிமேல் வழக்கு.—Action against Governor.—மாத்துறையிலே வேலையால் நீக்கப்பட்டவராகிய மெஸ். விஜயநாயகி யென்னும் நொத்தாரிசு தம்மை வேலையாற் தள்ளினது நியாய வீனமெனக் கூறித் தேசாதிபதிமேல் 80,000 ரூபா நட்டத்துக்குத்துரர்ச்சி செய்யப்போகின்றனராம். மாத்துறையிலே உப ஏசண்டராயிருந்த மெஸ் லெமெசூரியர் வேலையால் நீக்கப்பட்ட பின் சனங்களிடத்திற் பலகாணிகளை வாங்குவதற்கு நொத்தாரிசுவாயிருந்தவ ரிவரே. மெஸ். லெமெசூரியர்மேற் கொண்ட கோபத்தினுல் அரசாட்சியார் தம்மையும் அநியாயமாய் வேலையாற் தள்ளினரென்பதே நொத்தாரிசுவின் முறைப்பாடு.

போவர் மறியற்காரர்.—Boer Prisoners.—இலங்கையிலிருந்த போவர்களில் 1000 பேர்வரையில் பிரித்தானியராச்சியத்துக்குக் கீழடங்கிச் சீவிக்க வாக்குச் செய்து இந்தக்கிழமை தென் ஆபிரிக்காவுக்குக் கொண்டு போகப்படுகின்றனர். இவர்களோடு ஒலிவர், றூக்ஸ் என்னும் போவர் சேனுபதிகளும், ஒலிவரின் இரு புத்திரர்களும் போகின்றனர். ஒலிவரின் வேரோர் மகன் மன்னிபபுப் பெற்றுச் சென்றவருடத்திற் போய் விட்டனர்.

உவாலேஸ், கிரூன்ற் என்னும் இரு போவர்கள் உறுகாஸ் ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு 8 நாட்களாய் மத்தியமாகாண மலைகளுட்சுற்றித்திரிந்து கிரூன்ஸ் வாலியும் பார்க்க அதிகம் பொன் எடுக்கக்கூடிய மலைகளைத் தாங்கண்டு பரிசோதனை பண்ணி யிருப்பதாயும், இலங்கை அரசாட்சியார் தமக்கேதும் பணங்கொடுத்தாலன்றி இவ்விரகசியத்தைக் காட்டிக் கொடுப்பதில்லை யென்றுங் கூறினர். இவர்கள் கிரூன்ஸ் வாலிலே பொன் கண்டெடுக்கும் வித்தையிற் தேறினவர்களாம்.

புகைவீதி.—Railway.—வடக்கு நோக்கும் புகைவீதியில் குருநாகலுக்கும் அனுராசபுரத்துக்கு மிடையில் செய்யப்படும் வேலைமிகக் கெதியாய் நடைபெறுகின்றது. இந்தவருடத்தில் முழுவதும் முடிந்து போமென்பது சிலரின் அபிப்பிராயம். குருநாகலிலிருந்து 41 மைலுக்கு கல்லேற்றும் புகைவண்டிகளோடுகின்றன. அனுராசபுரம் வருவதற்கு இன்னும் 28 மைலுக்குத் தண்டவாளம் பதிக்க வேண்டியிருக்கின்றது

## கடிதம்.

### யாட்பாணக் கிறிஸ்த சம்ரட்சணைசங்கம்.

ஐயாபத்திராதிப,

யான் கி. சமரட்சணை சங்க சபாநாயகருக்கெழுதியவோர் பத்திரத்தின் சாரத்தையடக்கிய சில நியாயங்களைத் தங்கள் பத்திரிகைமூலமாய் இச்சங்க அங்கத்தவர்களுக்குத் தெரிவிக்குமாறு பிரார்த்திக்கிறேன்.

2 இச்சங்கத்தின் 10 ம் வருடாந்தக் கூட்டத்தில் நியாயமற்ற பிரகாரமாய் ஒப்புக்கொள்ளப்பட்டும், சங்க அங்கத்தவர் யாவராலும் கைக்கொள்ளப்படல் வேண்டுமென நியோகிக்கப்பெற்றும், அவ்விதம் கைக்கொள்வோர் அடையுஞ் சிலாக்கியங்களின்னின்ன வென்றும் 8 அல்லது 4 முறை உத்தரவாதப்பணத்தை செலுத்தத் தீர்மானித்தோர் எத்தனைமுறையென எழுதியனுப்ப வேண்டுமென்றும், இப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாதோர் சங்க அங்கத்தவர் நிரையினின்று நீக்கப்படுவாரென்றும், அச்சுறுத்தப்பெற்றள 653 வது சுற்றுநிருபத்தை விகிதர் அனுப்பப் பெற்றுக்கொண்டனன்.

3. இச்சுற்றுநிருபத்திற் காட்டப்பெற்றுள பிரமாணங்களை யான் தீர்க்காலோசனை செய்யுமிடத்து பின்வரும் நியாயங்களைக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ள இயலாதவனாயிருக்கிறேனென்பதை அதிக மனமடிவுடனறிவிக்கிறேன்.

4 இச்சங்கம்ஏற்படுத்தப்பெற்றுள நோக்கத்தைமீறி நடப்பதேன். ஆதரவற்ற கிறிஸ்தவர்களுக் சற்பசகாயத்தைக்கொண்டு உதவிசெய்யும் நோக்கத்தை முன்னிட்டு சங்கத்தை ஏற்படுத்தி பின் அவரை வருத்தி, வெருட்டி ஒட்டிப் பற்றறத் தொலைத்து விடுவது சங்கம் தொடங்கிய நோக்கத்திற்கு சரியாமா- "எண்ணித்துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவமென்பதிழுக்கு."

5. அவ்விதம் முன் நோக்கத்தை மீறிநடத்தல் அனுப்பசலுக்கேதுவான குற்றமாய்க் காணப்படுகிறது.

6. நவமாய் ஏற்படுத்தப்பட்ட பிரமாணம் சமரட்சணை சங்கத்தின் நோக்கத்தை யுடைத்தாயல்ல Life Insurance Company உடைய அஸ்திபாரத்தை உடைத்தாய் விளங்குகின்றது. இஃதே பட்டியென்றால் "மொட்டச்சி கூந்தலழகி" யெனப் பெயர் வகித்தாற்போற் காணப்படுகிறது.

7. "தேசங்கடோறும் செல்வர் நடுவில் வறியருங் குடியிருக்கின்றனர் அவர்களுக்குச் சகாயம் செய்யும்படி நல்லொழுக்கமும் சிவநேசமுமுள்ளவர்கள்பற்பலவகையாக முயற்சிசெய்து தேசங்களிலே நல்லகாரியங்களை நடப்பிக்கிறார்கள் நம்மூரிலேயும் அவ்வித முயற்சிகள் கையாளப்படுவது மிக அவசியம். வறிய கைமைகள், தாயிலிகள், தந்தையிலிகள், அவ்விருபாலாருமிலிகள், பெருகுகிறார்கள், அவர்கள் தங்கள் சீவனத்துக்கு சகாயம் செய்யும்படி இப்பெரிய ஒருசங்கம் நவமாக உதிக்கிறதுசந்தோஷம். இச்சங்கத்திற்சேரும் ஒவ்வொரு ஆளும் முதற் பிரவேசப்பணமாக ஐவைந்து ரூபாய் கொடுப்பதும் சங்க அங்கமாக சேர்ந்தவர்களில் ஒரு ஆள் மரிக்கும்போது மற்றவர்கள் ஒவ்வொருரூபாய் பொக்கிஷகாரனுக்கு அனுப்பி மரித்துப்போன ஆள் குறித்திருந்த ஆளுக்குக் கொடுப்பதும் செய்யவேண்டிய கடமையாகும். இது சிறிய தொகையாயிருப்பதால் வறியவர்கள் அங்கங்களாகச் சேர்வதற்கும். தங்களின் பின் தாபரிப்பாரின்றி வருந்தக்கூடிய தங்கள் மனவிமக்கள் தம் தினசீவனத்துக்கு உதவியாக 300 அல்லது 400 ரூபாய் பெற்றுக்கொள்ளப் பண்ணுவதற்கும் தகுந்த ஓர் வழி.

பருஷரேயன்றி ஸ்திரீகளும் வாலிபரேயன்றி கன்னியர்களும் அங்கங்களாகலாம் மரிக்கும்போது அவர்கள் குறிக்கும ஆளுக்கே அவர்களுடைய பணம் சேரும். ஆட்துணை வாக்கு வல்லபமற்ற அனேகர் மனதிலே தாங்கள் கொடுக்கும் பணத்தை ஆர் வாய்க்குட் போட்டுவிடுவார்களோவென்னும் நம்பிக்கையீனம் முளைகொள்ளக்கூடும்.

மூன்று மிஷனிலுள்ள குருமார் இச்சங்கத்திற் காரியகாரராயும். ஒருவர் பொக்கிஷகாரராயும் இருப்பதால். அவர்கள் சந்தேகப்பட வேண்டியதில்லை, சேருங்கள். என ஏழாம் வருடாந்த அறிக்கைப்பத்திரத்துக்கு இச்சங்கத்தின் நோக்கத்தைத் தெரிவிக்கும் நற்சாட்சிப்பத்திரமாக அனுபந்தம் சேர்க்கப்பட்டிருந்தது. அப்படியாயின் இச்சங்கத்தினங்கத்தவர்களாய்ச் சேர்ந்த கிறிஸ்தவர்களும், மிசியோன் ஆசாமிகளும் வருடம் ஒரு அல்லது இருமுறை பணத்தைக் கட்டுவதற்கு அரும் பிரயாசையோடு வயிற்றை வாயை ஒறுத்துக்கொடுக்க, அனேகர் தங்களை ஒறுத்தும் தங்கள் வீதப்பணத்தைக் கொடுக்க இயலாதவர்களாய் தாங்கள் எதிர்நோக்கியிருந்த சங்க சலாக்கியங்களை இழந்துபோனார்கள். இவ்வித வங்கத்தோர் வருடாந்தம் 8 அல்லது 4 முறை உத்தரவாதப்பணம் கொடுப்பதெப்படி, அப்படியானல் சம்ரட்சணை சங்கத்தின் காரியஸ்தர்கள் எழிய வறிய கிறிஸ்தவர்களான அங்கத்தவர்களுக்குக் காட்டும் அனுதாபமென்ன ? ஏதோ சகாயங்கிடைக்குமென்ற நிச்சயத்தைக் காட்டியல்லோ இப்படிப்பட்டவர்கள் சங்க அங்கத்தவர்களானார்கள். அவர்கள் புதுப்பிரமாணப்படி உத்தரவாதப்பணமிறுக்க இயல்புடை யோராயின் தங்கள் பணத்தை இவ்விதம் நிலைதழும்பி நோக்கம் மாறும் சங்கத்தில் விட்டு நஷ்டமடையாது Life Insurance Company யிற் சேமித்துப் புதிதாய் ஏற்பாடு பண்ணிய தொகையிலும் இருமடங்கு தொகையை அதி நிட்சயத்துடன் பெற்றுக்கொள்ளலாமே,

8. புதிதாய் ஏற்படுத்திய பிரமாணம் உத்தரவாதப்பணத்தைக்கொடுக்க வியலாத அங்கத்தோரைச் சங்கத்தினின்று நீக்கிவிட அவர் மனச் சஞ்சலத்தோடு முன்னிறுத்த பணத்தையும் இழந்துபோகின்றனரே, அப்படியாயின், உத்தரவாதப்பணத்தை முறையே கொடுக்கும் இயல்புடைய அங்கத்தோர் தங்கள் வறிய சங்கத்தவர்களால் வீதப்பணங்கொடுக்க இயலாமற் பறிமுதலாய் எடுக்கப்பட்ட பணத்திற்குப் பங்காளராகின்றனரே, இஃது கிறிஸ்த சமரட்சணை அல்லவே.

9. சம்ரட்சணைசங்கத்தின் நோக்கத்தையறிந்து அதின் பிரமாணங்களுக்கமைந்து நடப்பேனென்ற கட்டுரைபண்ணி யங்கத்தவனானேன். இதன்மேல் சங்கம் தனது கடமையை நிறைவேற்றவேண்டியது.

அவ்விதம் செய்யாது, சங்க அங்கத்தவர்களைப் புதுப்பிரமாணப்படி குறித்த உத்தரவாதப் பணத்தைக் கொடுக்க வேண்டுமென்றும் இன்னோர் கட்டுரைக்கமையவேண்டுமென்றுஞ் சம்ரட்சணைசங்கத்தின் நோக்கத்தையழித்து. அதன் செலவில் ஒரு Life Insurance Company யை ஏற்படுத்தல் சரியாகுமா. ஆகையால் இவ்வித நவமான ஏற்பாடு சம்ரட்சணை சங்கத்தின் நோக்கமாகாததால், அதைச்சேர்வோர், தெரிவினாலன்றி வலோற்காரமான பயமுறுத்துதலினாலல்ல.

10. சம்ரட்சணைசங்கம் வரண்டு சுருங்கிப் போகும் நேரத்தில் அதனங்கத்தவர்களை தன்நோக்கத்தைப்பிறப்பியாத இன்னோர் சங்கத்துக்கு சம்ரட்சணைசங்கத்தின் நோக்கமென்று நாட்டலும் அவ்விதமான பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாதோரை சங்கத்தினின்று நீக்கிவிடுவோமென்று, அச்சுறுத்தலும், நிவிர்த்தியற்ற அநீதியாயிருக்கின்றது.

11. மூன்றமிசியோனிலுள்ள ஐரோப்பிய குருமார் இச்சங்கத்துக்குதலைவராயும் பொக்கிஷகாரனும் இருப்பதால் சங்கம் சந்தேகப்படத்தக்கதல்ல என்று சொல்லியும் சங்கத்தின் தளர்ச்சியைக் கண்டு இரண்டு மிசியோன் ஐரோப்பிய குருமார்களும், விலக ஒருவரில் நின்று தத்தளிக்கின்றது.

12. இச்சங்கத்தின் கடந்தகால வருடாந்தஅறிக்கைப்பத்திரங்களொவ்வொன்றும் இச்சங்கம் வருடந்தோறும் அனுகூலமடைந்ததாகவும், அவ்வித அனுகூலத்திற்கு தேவனுக்குத் துதிசெலுத்தினதாகவும் சொல்லிக் கொண்டே வருகின்றது.

அப்படியாயின் சமரட்சணை சங்கத்துக்கு இவ்வித அகாலமரணமேன், இல்லதை இல்லதென்றும் உள்ளதை உள்ளதென்றும் சொல்லாமல் அனுகூலமடைகிறதென்றங்கத்தவர் மனதை குளிரப்பண்ணி இப்போ சங்கம் திடீரென அற்றுப்போகுமென்றால் எவ்விதமாய் அங்கத்தவர்களை வஞ்சித்ததாய் முடிந்தது.

13. இன்னும் 7ம் வருடாந்த அறிக்கைப்பத்திரம் இச்சங்க நிலையை அறியும்பொருட்டு இங்கிலாந்திலுள்ள Actuary க்கு எழுதி அவர்கள் யோசனையின்படி செய்ய ஆலோசிப்பதாய்ச் சொல்லியது அவர்களாலோசனை வந்ததோ வரவில்லையோவென்பது தெரியவில்லை.

மேற் காட்டப்பட்ட நியாயங்களினல் புதிதாய் நியோகிக்கப்பெற்றுள பிரமாணத்தைக் கைக்கொள்ள இயலாதவனாய் இருக்கிறேன்.

"குட்டக் குட்டக் குனிபவனும் மடையன் குனியக் குனியக் குட்டுபவனும் மடையனாகாது. எனக்குவர வேண்டிய பணத்தைத் தந்து சங்கத்தினின்றுஎன்னை விலக்கி விடும்படி கேட்கின்றேன்.

இங்ஙனம், ஓர் அங்கத்தவன். C·T. D.
Chundicully. 13· 10. 02.

---

கண்ணாற் கண்டுஞ் செவியாற் கேட்டும் மூக்கான் மணந்தும் உடம்பினாற் தீண்டியும் நாவினாற் சுவைத்தும் மனசினாற் பகுத்து மறிகின்றவாறறிவு நிரம்பிய மானுடர்கள் சம்பாதிக்கத்தக்க பொருள்கள் கல்விப்பொருளசெல்வப்பொருளென விருவகைப்பொருள்களுள்ளன. ஆவற்றுள் செல்வப் பொருளாவன, பொன் மணி என்முதலியனவாகும். இவ்விருவகைப் பொருள்களையுஞ் சம்பாதித்தவர்கள் மகாவுத்த மோத்தமராவர், இவற்றுள் ஒன்றேனு மில்லாதவர்கள் பேய்ப் பிறப்பென்று சொல்லப்படுவர்கள். கடவுள் இச்செல்வப்பொருளைக்கொடுத்தும் சரீரசுகம் ஆன்மசுகமென்னு மிரண்டின் பொருட்டாகு மென்று புத்தி பண்ணும் பகுத்தறிவில்லாதவர்களுக்கு இடம் பொருள் ஏவல்களெல்லாமிருந்து மென்னபயன் படும் ஐயையோ யாதுசொல்வேன். அச்செல்வப்பொருளை யுதவியாகக் கொண்டு உடம்பைப் பேணிவளர்த்து அவ்வுடம்பைக் கொண்டு கல்விப்பொருளைச் சம்பாதித்து அக் கல்வியறிவாகும் ஞானக் கண்ணினலே யிவ்வுலகவாழ்வு பொய் யென்னு முண்மையை யுள்ளபடியறிந்து நரகமோட்சங்களையு மறிந்து பாவபுண்ணியங்களையுமறிந்து அருவப்பொருளாகும் கடவுளையு முள்ளபடியறிந்து வழிபட்டுப் பரகதியாகும் ஆன்மசுகத்தைச் சம்பாதித்தல் வேண்டும். இவ்வுண்மையை யறியாத சில ஏழைச்சனங்கள் செல்வப்பொருளாலே ஆன்மசுகத்தைச் சம்பாதியாமல் விபரீதவுணர்ச்சியினலே மோசம் போகிறார்கள்.

யாழ்ப்பாணம் வட்டுநகர் தமிழ். வி. சாலை.
மு. ஆறுமுகவுபாத்தியாயர்.

## PERCY SCOTT

The second son of Dr. and Mrs. T. B. Scott was taken suddenly ill on Thursday the 16th inst and within twenty four hours was gathered by the Saviour into His loving arms. Born March 23, 1900, he lived but 2 years and 7 months in this earthly home and then went to join his brother in the "many mansions." Percy was a bright, lively little boy, with winning ways that endeared him to all with whom he came in contact. He spoke Tamil well and English so little that the parents wondered how he would be able to get along when the time came for their return to America on furlough. He seemed well and strong, and his death was as unexpected as it was sudden.

Every thing that loving hearts could think of was done to check the disease, but the Great Physician ordered otherwise. The Master had need of him and he left at the summons. The next morning after brief services at Manipay and Uduvil his body was laid away amid ferns and flowers by the side of his brother, in "God's acre" at Uduvil.

The many friends of Dr. and Mrs. Scott will pray that comfort and peace may be given from above. Rich in heavenly treasures, the sorrowing parents miss the absent faces, and our sympathies and prayers are with and for them. God is love, and God only can comfort.

## THE JAFFNA CONVENTION

As previously announced the United Convention for Christian workers, was held in the Fort church on the 14th, 15th, and 16th inst. Great credit is due the Committee for getting forms and arranging the seats so that all could see and hear well. The arrangements for music, lighting the church at night, showing people to seats &c, were all that could be desired. There must have been considerable expense in connection with the printing of hymns and notices and in the bringing and returning of forms, and we hope that any who have received help from the meetings will send in contributions toward the defraying of these expenses, to Rev. E. M. Weaver, Wesleyan Mission, Jaffna.

There were four meetings held each day the one at 8 A. M. being attended principally by those from the town and vicinity, and the one at 11 A. M, by many from the stations outside Jaffna town. These meetings were designed especially for Christian workers and the themes presented by Mr. Eddy and his colleagues, all in the vernacular, were of great practical benefit. Between four and five hundred attended these meetings daily, once or twice the number reaching 600.

At 3'oclock each day Mr. Eddy gave a Bible reading on Ephesians in English, Mr. Azariah translating the main points in Tamil On the last day after finishing the Bible reading, Mr. Eddy spoke for half an hour on the subject of caste. Very plainly yet kindly did he point out the great wrong the Christian church was doing in Jaffna in tolerating this great evil. The church was deceiving itself when it said caste was dying out. The time has come for us to come out openly and boldly and to show by practice as well as by word that all followers of Jesus Christ belonged to one great family. In some churches the low caste still sat upon the floor, and everywhere, he was treated as an inferior. Would to God the Christian church would listen to the voice of God speaking again and again by the mouths of his messengers, on this great subject.

The evening meetings were held from 6 to 7.30 and partook largely of an evangelistic character. The church was crowded, full 900 being present the first evening and about 1,200 the last evening when every available space was filled with chairs and benches. The Gospel was presented with all boldness and earnestness and many were touched, and determined with Divine help to live better lives in the future. How many were newly converted we have no means of knowing, but we believe not a few accepted Christ as Saviour for the first time. It is for pastors and others to get hold of these who have newly come out and instruct them in Christian truth.

The missioners are now working in the three Protestant colleges for a few days. They leave for India by the next steamer sailing from Jaffna on the 29th inst. We thank God for their visit and hope that much permanent good may result from their labours.

## LAWLESSNESS IN THE NORTH

A correspondent in the *Ceylon Observer* of the 11th inst. makes out a bad case against Jaffna. While we do not share altogether in his pessimistic views we do think that the attention of Government might well be called specially to two of the causes which he points out as conducive to the increase of lawlessness in the peninsula. One is the increase of intemperance. Now the best way of checking the growth of intemperance is to educate the public against the evils of drinking, and this can best be done by enlisting the sympathies of prominent men and inaugurating a vigorous campaign against the saloon. But the Government is certainly bound to initiate and carry out vigorous measures against the illicit sale of arrack. It is a fact well known to the Headmen that places exist which are not licensed, and where toddy and arrack are freely sold. If some zealous reformer points out such a place to the authorities, all traces are at once removed and it becomes impossible to prove the fact.

Whether the headmen actually connive at such a proceeding or not is perhaps not so clear, but that they are apathetic in detecting such places and prosecuting the offender is quite evident.

The second point is the headmen themselves. A lot of young men have been appointed vidahns who have no power whatever to stop disturbances and preserve order. They jump out and arrest a carriage which on a bright moonlight night has no lamps lit, but they let any number of carts pass by on the darkest night without a light. We now speak of course of the country. It is not only the question of salary, it is as much the question of appointing fitting men who have influence in the community in which they live and who might easily become a terror to evil doers. Let the Government appoint honest men to this post—men who have the respect of the community, and pay them fair salaries and they will become much more efficient.

## WHAT IF CHRISTIANITY IS NOT WANTED.

A young man once applied to a dry goods merchant for the position of clerk. The merchant asked him if he was a good salesman: he replied that he could sell goods when people wanted to buy. The merchant said: "I want a clerk to sell goods to people who do not want to buy."

It is very easy to interest people, in preaching, in Bible study, in Christian work, who want to be interested. But there are many people who do not want to be interested, who are afraid, if they do get interested, that they will be obliged to give up some of their pleasures.

There is in our time too much lamenting over the fact of the fewness of those who come to prayer meeting and church services and too little laying of wise plans for those who do not want to come, for fear they will be interested and converted. Our need today is to interest those in Christianity who do not want to be interested. The drummer for a commercial house must continually talk to men who are reluctant to buy his goods; he must seek for new customers; he cannot go to a town, send out notices and wait for customers to seek him; every means is used to call attention to his goods and his house.

Our Lord in His short ministry went about continually seeking men. His activity and preaching were persistent and incessant. He continually laid hold upon men who did not want to be laid hold upon; then they became His best disciples.

Men are often discouraged because they feel that Christianity is not wanted here and there or by this one and that one; but there is just where it is most needed and if carried with the presistency of a Paul, it is just there that it will win its greatest victories. *Selected.*

## MULLAITIVU NEWS.

The port is now closed and the Subcollector has received orders to proceed to Jaffna as usual.

The Asst.Govt. Agent will return to the station from circuit with Mr. Ariyakuddy, Kachcheri Mudaliyar on or about the 10th Inst.

The Act.Govt. Agent was specially appointed as District Judge, Mannar, to try a case there on the 10th Inst.

The selection of Dr.J. R. Jeremiah as medical officer to the station gives much satisfaction to the public. Within the short time he was here his amiable ways has won for him much popularity. It is believed that he will prove to be the right man in the right place. In thanking the authorities for sending him here, we sincerely hope that his stay amongst us will also be a long one. The appointment of a Christian Medical Officer to this station is very rare.

Mr. R. Rasasingam Govt. Surveyor was indisposed a few days ago and is now doing well.

Mr. and Mrs. T.W. Tambiyappa celebrated the 3rd anniversary of the birth of their eldest son on the 9th Inst. Master Tambiappa was the recipient of many presents.

Mullaitivu
17th Oct. 1902 Cor.

## NOTES.

—Among its many curious products, South Africa includes the "Sneezwood" tree which takes its name from the fact that one cannot cut it with a saw without sneezing, as the fine dust has exactly the effect of snuff.

—Mr. T. N. WEBBER who played the National Anthem at Axminister Parish Church when Queen Victoria was crowned did the same at the coronation of Edward VII.

—FELINE TIME—TELLERS. Few persons are aware that it is possible to tell the time by the eye of a cat. This is done by a close study of the feline pupil, which contracts and expands with great regularity each day. Thus at noon the pupil of a cat's eye is contracted into a mere slit, a mere horizontal line and at midnight it is at its large points of expansion being then as big and round as a grape.

THE KINGS TUESDAYS. The principal event in the life of His Majesty King Edward VII have been on Tuesday. Nov. 9th 1841, His Majesty was born, on Tuesday, Janary 25th 1842 he was baptized, on Tuesday March 10th 1863 he was married.

—The cheapest postal service in the world is that of Japan, where for two sen, about seven tenths of a penny letters are conveyed all over the empire.

—DARKNESS OF OCEAN DEPTHS. "How far does sunlight penetrate beneath the surface of the sea?" has been asked many times, and now the camera has answerd the question. By exposing the most sensitive photographic plates at various depths it has been ascertained with definiteness how much sunlight there is in the water with each descending foot. There is a point at which no action of light is found, and that point is 600 ft. under the surface. Below that is absolute darkness.

—The British Museum owns the largest book in the world and the smallest. The largest is an atlas of the fifteenth century. It is seven feet high. Between its generous leaves a tall man's head is hidden. The smallest is a tiny "Bijou Almanac"—less than an inch square and easily to be concealed in the finger of a lady's glove.

—Fifty million white people in Great Britain and her colonies have on their hands the gigantic work of keeping a quarter of the globe and a third of its population permanently under control.

—In a letter dated on coronation day King Edward made a gift to the British people of the royal estate of Osborne, on the isle of Wight, which was the favourite residence of the late Queen and the scene of her death. It is one of the conditions of the gift that the people will always have access to the house and the special use to which it will be put will be that of a temporary home for invalided officers of the army and navy.

—The crown Prince of Sweden presided at the recent World's Conference of Young Men's Christian Associations at Stockolm. There are now 6355 Y. M. C. A's in the world.

[*Continued from page 1.*]

**Mr. H. Oliver.** The Chief Resident Engineer was in Jaffna last week arriving by land and left by steamer after inspecting the works.

**Central College.** Mr. Eddy has been holding this week a series of meetings in the "College" morning and evening, and we are glad to hear that the addresses have been effective and several students have decided to be on the Lord's side. *Com.*

**Children Sunday** Sunday the 19th inst was observed at Jaffna Pettah church as "Children Sunday." The Morning service in Tamil and the Evening service in English was conducted by Mr. Eddy In the afternoon at 3 P. M. the children of all the schools connected with the church assembled in the church and appropriate addresses were given by Mr. Eddy and Mr. Parmananthar. *Com.*

**Dr. C. T. Griffin** acting P. C. M. O. arrived at Jaffna on the 16th inst. by land. On the 17th he proceeded to Pt. Pedro and returning to Jaffna left by coach for Colombo the following day. During his stay here he visited the Jaffna F. N. S. Hospital. *Com.*

**Alleged Cholera at Karavetty.** Five persons died of purging and vomiting at Karavetty last week. The medical opinion of the said cases is that the said deaths were the result of "fish poisoning" The medical Department is however alert about the alarming news at Karavetty and strict orders have been given to headmen and others concerned to keep fish markets and other public places and compounds clean and tidy. *Com.*

**The Govt. Agent.** We understand that Mr. Lewis is leaving Jaffna on the 25th inst and will proceed to Galle as Govt. Agent. *Com.*

**Death by drowning.** On Monday morning at Nallore a pupil of the Central College aged about 12 years fell accidentally into a well while drawing water and died. The boy was alone at the time and no immediate help could have been given. The unfortunate child was a grand nephew of Mr. C. W. Cathiravaluppillai. *Com.*

**Judicial.** Mr. J. P. Lewis as additional District Judge heard on the 15th inst. the case specially fixed to be tried by him. The charge against the accused was under section 190 of the Penal Code for giving false evidence. He found the accused guilty and sent him for a year's rigorous imprisonment. *Com.*

**School Inspector.** Mr R. H. Leembruggen is going on leave to India for three months and Mr. Fernando B. A. has come to Jaffna to act for him. *Com.*

**Day of Prayer for India and Ceylon.** Sunday, November 16th, has been selected as a general Day of Prayer for India and Ceylon. We hope all churches will make it special day of intercession. In our next issue we will print the call in full.

Printed at the Press of Strong and Asbury, Manepay
Published by A. C. Mission and Tambyah Strong Cooke.